Vol. 5, Issue-1, June 2021 P.No. : 1 - 13

புதிய அவையம்

மின்னிதழ்

ISSN : 2456-821X

SACRED HEART RESEARCH PUBLICATIONS

http://shcpub.edu.in

**முனைவர் சு.பிரேம்குமார்,**
உதவிப்பேராசியர்,
தமிழாய்வுத்துறை,
அரசு கலைக்கல்லூரி,
திருவண்ணாமலை – 606603.

---

# ***தலைப்பு :*** சாக்கைப் பறையனார்

---

## முன்னுரை

**'பறையன்'** என்ற சொல் சங்க இலக்கியங்களில் ஓரிடத்தில் மட்டுமே வருவதாக அமைந்துள்ளது. தலையானங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனைப் பாடிய மாங்குடிக்கிழாரின் புறநானூற்றுப் பாடலில் மட்டுமேயன்றி வேறெங்கும் வரவில்லை. குரவு, தளவு, குருந்தம், முல்லை என்னும் நான்கு பூக்களைவிடச் சிறந்த பூவும் இல்லை. வரகு, தினை, கொள், அவரை ஆகிய பயறுகளைவிடச் சிறந்த உணவும் இல்லை. அதேபோல், துடியன், பாணன், பறையன், கடம்பன் ஆகிய நான்கு குடிகளைவிடச் சிறந்த குடிகளும் இல்லை. பகைவரை எதிர்கொண்டு அவர்களின் களிற்றைக் கொன்று போரில் பட்டு வீழ்ந்து கல்லானவரின் நடுகல்லைத் தொழுவதை விடுத்து, நெல்லும் பூவும் சொரிந்து வழிபடத்தக்க வேறு கடவுளும் கிடையாது என்னும் பொருளில் வரும்,

**"குரவே தளவே குருந்தே முல்லையென்ற**
**இந்நான் கல்லது பூவும் இல்லை**
**கருங்கால் வரகே இருங்கதிர்த் தினையே**
**சிறுகொடிக் கொள்ளே பொறிகிளர் அவரையொடு**
**இந்நான் கல்லது உணவும் இல்லை**
**துடியன் பாணன் பறையன் கடம்பன்என்று**
**இந்நான் கல்லது குடியும் இல்லை"[1]**

என்பதே அப்புறநானூற்றுப் பாடலாகும்.. இப்பாடலின் திணை: வாகை, துறை: மூதின்முல்லையாகும்.

குரவும் தளவும் குருந்தும் முல்லையும் முல்லைநிலக் குடியினர் சூடிவந்த பூக்களாகும். வரகும், தினையும், கொள்ளும், அவரையும் அம்முல்லை நிலத்தவரின் அடிப்படை உணவுப் பொருள்களாகும். முல்லை நிலத்து ஊரே குடி எனப்பட்டது. இம்முல்லை நிலத்தில்தான் அரசு என்னும் கட்டுமானமும் முதன் முதலில் தோன்றியது. முல்லைநில வாழ்க்கையில் ஏற்பட்ட தொல்குடிப் போர்களின் உறுப்புகளாகவே துடியன், பாணன், பறையன், கடம்பனும் இருந்தனர். மேற்கண்ட மாங்குடிக் கிழாரின் பாடலின் இறுதியில் நடுகல் வழிபாடு குறித்து,

**“ஒன்னாத் தெவ்வர் முன்னின்று விலங்கி**
**ஒளிறுஏந்து மருப்பின் களிறுஎறிந்து வீழ்ந்தெனக்**
**கல்லே பரவின் அல்லது,**
**நெல்உகுத்துப் பரவும் கடவுளும் இலவே”**[2]

பகைவர் படைகளின் மேலெதிர் வராதவாறு தடுத்து, அவர் கொல்களிற்றை வென்று, தாமும் வீழ்ந்து நடுகல்லாயினவரின் நடுகல்லைத் தொழுவதன்றி, நெல்லும் பூவும் சொரிந்து வழிபடச் சிறந்த வேறு கடவுளும் கிடையாது. மாங்குடிக்கிழாரின் இப்புறநானூற்றுப் பாடல் ஓர் உண்மையை நமக்கு வெளிப்படுத்துகின்றது. முல்லைநில வாழ்க்கையில் மூண்ட தொல்குடிப் போர்களின் உறுப்புகளாகவே இருந்த துடியனும், பாணனும், பறையனும், கடம்பனும் போர்களில் இறுந்துபட, அவ்வீரர்களுக்காக நடுகற்கள் எடுப்பிக்கப்பட்டன. அந்நடுகல்லிற்கு அம்முல்லை நிலத்தின் விளைபொருள்களான பூவும் நெல்லும் சொரிந்து வழிபடும் கடவுளாகவும் போற்றினர் என்பது பெறப்படுகின்றது. இப்பாடலில் நடுகல்; முல்லை நிலக்குடிகள்; உணவுப் படையல்; பூத்தூவி வழிபடல் ஆகிய நான்கு கூறுகளும் வாகைத் திணையில் மூதின் முல்லையோடு கட்டமைக்கப்பட்டுள்ளதை காணமுடிகின்றது.

**வாகைத்திணை**: “திணை என்பதற்கு இடம், வீடு, குலம், ஒழுக்கம், பரிவு என்று பல்வேறு பொருள்கள் உண்டு.

**துறை: மூதின்முல்லை:** மூதில்+முல்லை என்று பிரிக்கலாம். முது என்றால் தொன்மையான என்று பொருள். இல் என்றால் குடி என்று பொருள். மூதின் என்றால் தொன்மையான குடி என்று பொருள். மூதின் முல்லை என்றால் ‘மறக்குடியில் பிறந்த ஆடவர்கேயன்றி அம்மறக்குடியில் பிறந்த மகளிர்க்கும் மறம் உண்டாதலை சிறப்பித்துக் கூறும் புறத்திணை’ என்று சென்னைப் பல்கலைக்கழகப் பேரகராதி குறிப்பிடுகின்றது.

தொல்காப்பியம், சங்க இலக்கியங்களில் சாதி என்ற சொல் பயன்படுத்தப்படவில்லை. சாதி என்ற கருத்தாக்கமும் (Concept) இக்காலக்கட்டத்தில் தனித்த அடையாளமாக உருவாகவில்லை. ஆனால் குடிகள் பற்றிய செய்திகள் சங்க இலக்கியங்களில் காணக்கிடைக்கின்றன.

“குடி என்ற சொல்லிற்கு ‘Tamil Dictionary’ கூறும் பொருள்:

1. Ryot: குடியானவன், கூடுகெழீஇய குடிவயினான் (பொருந.182)
2. Tenants: குடியிருப்போர்
3. Subjects, citizens: ஆட்சிக்குட்பட்ட பிரசைகள்,

மன்னவன் கோனோக்கி வாழும்குடி (குறள்-542)

4. Family: குடும்பம், ஒரு குடிப்பிறந்த பல்லோருள்ளும் (புறநா.183)
5. Lineage, Descebt: கோத்திரம் (பிங்)
6. Caste, Race: குலம் (பிங்)
7. House, Home, Mansion: வீடு, சிறுகுடி கலக்கி (கந்த.பு.ஆற்று-12)
8. Town, Village: ஊர் குன்றகச் சிறுகுடிக் கிளையுடன் மகிழ்ந்து (திருமுரு.196)
9. (T.K.Kuti) Abode, Residence: வாழ்விடம், அடியாருள்ளத் தன்புமீதூரக் குடியாக் கொண்ட (திருவாச.2,8)

குடி என்றால் குடிமக்கள் என்று திருக்குறள் பொருள் கொள்கிறது. மன்னவன் கோனோக்கி வாழுங்குடி (திருக்குறள்-542). குடும்பம் என்று புறநானூறு பொருள் கொள்கிறது. ஒரு குடிப்பிறந்த பல்லோருள்ளும் (புறநானூறு.183). சிறிய நகரம் அல்லது கிராமம் என்ற பொருள் திருமுருகாற்றுப்படையில் இடம்பெறும் "குன்றகச் சிறுகுடிக் கிளையுடன் மகிழ்ந்து" (திருமுருகாற்றுப்படை-196) சொற்றொடர் மூலம் தெரியவருகிறது. மாங்குடிக்கிழார் சங்ககாலத் தமிழகத்தின் ஐந்து நிலங்களிலும் வாழ்ந்த குடிகளைப் பற்றிக் கூறவில்லை. முல்லை நிலத்தில் வாழ்ந்த மூத்தக் குடிகளான துடியன், பாணன், பறையன், கடம்பன் ஆகியோரைப் பற்றியே பேசுகிறார் என்பதை உணர்ந்து கொள்வது இவ்வாய்விற்கு வலுசேர்க்கும்.

## நடுகல்

"நடுகற்கள் பெரும்பாலும் ஆகோள், பூசல்மாற்று, ஊர்க்கொலை ஆகிய நிகழ்வுகளில் வீரத்துடன் போர் புரிந்து உயிரிழந்த வீரனுக்காக எடுக்கப்பெற்ற நினைவுச் சின்னமாகும். கால்நடைகளுக்கான மேய்ச்சல் நிலத்திற்காகவும், ஆநிரைக்காகவும் பூசல் நடைபெற்றது. பண்டைய காலத்தில் கால்நடைகளே செல்வம் எனப்பெற்றதால் ஆகோள் பூசல் தமிழர்களின் வாழ்வில் அன்றாட நிகழ்வாக பண்டு இருந்தது. தொல்காப்பியமும் ஆநிரைக் கவர்தலுக்கு வெட்சித்திணை என்றும், ஆநிரை மீட்டலை கரந்தைத்திணை என்றும் இலக்கணம் வகுத்தது. சங்கச் செய்யுள்களில் ஆகோள் காட்சிப்படுத்தப்படுகிறது. நிரைக் கவர்தல், மீட்டல் ஆகியவை முல்லை, பாலைப்பகுதிகளில் அன்றாட நிகழ்ச்சியாக விளங்கின."[3]

## கல்லெடுப்போர்

நடுகல்லை எடுப்பவர்கள் பெரும்பாலும் இரத்த உறவுள்ள பங்காளிகளே. தந்தைக்கு மகனும், மகனுக்குத் தந்தையும், பெரியப்பா, சிற்றப்பாவும் அவர்தம் மக்களும் அண்ணன் தம்பிக்கும், தம்பி அண்ணனுக்கும் நடுகல் எடுத்துள்ளனர். ஒரே குலத்தினைச் சேர்ந்தவர்கள் இறந்தால் ஒரு கல்லிலேயே அனைவர் உருவங்களையும் பெறித்து வைத்துள்ளனர். ஒரே போரில் பல்வேறு குலங்களைச் சேர்ந்தவர்கள் இறந்தால் தனித்தனி நடுகல் நடப்பட்டுள்ளது. பெண்களுக்கு நடுகல் எடுக்கவில்லை. சில நடுகற்களை வீரர்களும் ஊர்மக்களும் நட்டுள்ளனர். நாட்டாரும் நடுகல்லை நடுவித்தனர். நடுகல் பலவற்றில் நட்டவர்கள் பற்றிய குறிப்பு ஏதுமில்லை. அதிலும் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு வரை நடப்பட்ட நடுகல்லில் அத்தகைய குறிப்பு அருகேயே காணப்படுகிறது. ஆகையால் பல்லவர்

காலத் தொடக்கம் வரை நடுகற்கள் எடுப்பது சமூகப் பொறுப்பாக இருந்திருக்க வேண்டும் என்று கருத வேண்டியுள்ளது. பின்னாளில் அந்தந்தக் குடும்பத்தாரே நடுகல் எடுக்கும் வழக்கம் தோன்றியிருக்கலாம்.[4]

## சாக்கைப் பறையனார்

திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் வட்டத்திலுள்ள பெரியகோளாப்பாடி என்ற சிற்றூரின் தென்கோடியில் முதலாம் மகேந்திரவர்மனின் (கி.பி.601) காலத்தில் வட்டெழுத்து வடிவத்தில் எடுக்கப்பெற்ற நடுகல்லில்தான் சாக்கைப் பறையனார் என்ற சொல் குறிப்பிடப்படுகின்றது.

### கல்வெட்டு

1. “கோவியைய மயேந்திரபருமற்கு
2. யாண்டு பதினொன்றாவது கீழ்வேணாட்
3. டுத் துடரிமேல் விலக்கு மிறை
4. யார் வந்த ஞான்று பெரும்பா
5. ண்ண ரையர் மருமக்கள் அம்கோ
6. ட்டையார் சேவகன் **சாக்கை ப**
7. **றையனார்** இளமகன் ஏறன்
8. எறிந்து பட்டான்”[5]

என்பது கல்வெட்டின் வாசகமாகும்.

## சாக்கை

சாக்கை: நிமித்திகன், புரோகிதன், சாக்கோட்டை என்னும் ஊர், அரசர்களுடைய காரியத் தலைவன்

சாக்கையன் : கூத்தாடும் சாதியான் (கழகத் தமிழகராதி)

அரசருக்குக் கருமத் தலைவராய் உயர்பதவி வகித்தவர்க்கு வள்ளுவன், சாக்கை என்ற சிறப்புப் பெயர்கள் முன்பு வழங்கலாயின என்பது,

> **“வள்ளுவன் சாக்கை யெனும்பெயர் மன்னீர்க்கு**
>
> **உள்படு கருமத் தலைவர்க் கொன்றும்”**

என்று திவாகரச் சூத்தரத்தின் வழியே அறியமுடிகின்றது. உள்படு கருமத் தலைவர் - அரசர்கீழ்க் காரியத் தலைமை வகிக்கும் அதிகாரிகள்.[6]

> **“வள்ளுவன் அரசன் கட்டளையையே முரசறைந் தறிவித்தவன்;**
> **சாக்கையன் அரசர்க்கே நாடகம் நடிப்பவன். ஆதலால்**
> **இவ்விருவரும் அரசர் தொடர்பே கொண்ட அரண்மனைப் பணியாளராவர்.”[7]**

“ஆன்றடங்கிய ஞானத்தாலும் தவத்தாலும் மாபெரும் அறிவர்களாயிருந்தவர்கள் அரசர்களுக்கு ஆசான் (ஞானக்குருக்)களாயிருந்து வழிகாட்டி வந்தனர். சாக்கையார், கணியர், நிமித்தகர், பார்ப்பார் என்றெல்லாம் அழைக்கப்பட்டு வந்த வள்ளுவர்களோ, அரசர்க்கும் பிறர்க்கும் கருமத் தலைவர்களாயிருந்து நாள்மீன் கோள்மீன் பார்த்து நல்லது கெட்டதைப் பற்றிச் சொல்லி வந்ததுடன், பிறப்பும் மணமும் இழவும் முதலான வாழ்வியல் நடப்புகளுக்குரிய சடங்குகளை நடாத்தி வந்தனர். பாணர்களும் புலவர்களும் பாக்களை யாத்தும், மன்னர்க்கு உசாத்துணையராய் விளங்கியும் அரசியலை வழிநடத்துநர்களாக இலங்கினர்.”[8]

“ஞாயிற்று மண்டிலத்தின் மீதுள்ள 27 உடுக்கூட்டங்களின் (சோதிகளின்) ஊடே புகுந்து செல்லும் ஞாயிற்றின் இடப்பெயர்ச்சிகளைக் கண்டறிந்து சொல்வது சோதிடம் (சோதி +இடம்). அந்த உடுக்கூட்டங்கள் இருக்கும் பெயரும் காலங்களை வகுத்துரைப்பதே நிமித்திகம். அவற்றைக் கணக்கிட்டுச் சென்ற காலத்தையும் நிகழ்காலத்தையும் விளக்குவது சாக்கையம். நல்லது கெட்டது என்னும் நிகழ்வுகளின் போது சடங்குகளைச் செய்பவனே வள்ளுவன்”[9]

“ஞாயிற்று மண்டிலமாகிய சோதி வட்டத்தின் (Zodiac) மீது ஊர்ந்து செல்லும் ஞாயிற்றின் பெயர்ச்சிகளைக் கணித்துச் சொல்பவனே நிமித்திகன்.

**“நிமித்திகன் உரைத்தல் நிறைந்த சோதியான்**
**உமைத்தொகை யிலாததோர் உவகை யாழ்ந்துகண்**
**இமைத்திலன் எத்துணை தொழுதுமீர்மலர்**
**சுமைத்தொகை நெடுமுடி சுடரத்தூக்கினான்”**[10]

என்னும் சூளாமணியின் விளக்கத்தால் அது விளங்கும்.

“சிவபெருமான் ஆடியதாகக் கூறப்பட்டும் தாண்டவங்களைச் சாக்கியங்களும் ஆடி வந்தனர். அதற்காகக் கோயில்கள் அச்சாக்கியர்களுக்குச் சாக்கைக் காணி அல்லது கூத்தக்காணி எனும் காணிக் கொடையை வழங்கின. சாக்கையார் கூத்தை இக்காலத்துச் சேரலத்தில் கடியாட்டம் என்றழைக்கின்றனர். சாக்கையரை நங்கையர் என்றும் அழைத்தனர். கி.பி. 9ஆம் நூற்றாண்டில் குலசேகரப் பெருமாள் காலத்தில் சாக்கையர் கூத்து சங்கதமயமாக்கப்பட்டது.”[11]

“கோதம புத்தரே வடநாட்டுச் சாக்கையர் (Sakhya) குலத்தவர்தான் என்று அயோத்திதாசர் மீண்டும் மீண்டும் கூறுவார். கலிவாகு, குலவாகு, கணவாகு, விரவாகு, இட்சுவாகு முதலான ஒன்பது சாக்கைய அரசர்களின் வழியாக வந்த மண்வாகு என்பானுக்குப் பிறந்தவரே கோதம புத்தர் என்பார் அவர்.”[12]

“புத்தர் பிறந்தபோது பூதவியம், கடவுள் மறுப்பியம், இன்மையியம், தற்செயலியம், ஆசிவகம், சாக்கையம் ஆகிய அறுவகை மெய்யியல் பள்ளிகள் ஒன்றோடொன்று தருக்கமிட்டுக் கொண்டிருந்ததாக அருங்கலச் செப்பு கூறுவதை அயோத்திதாசர் எடுத்துரைக்கின்றார். இவற்றில் கணியத்தையே மெய்யியல் விளக்கமாகக் கொண்ட அறிவுத்துறைஞரையே ஆறாவதாக வரும் சாக்கையம் குறிக்கும்.”[13]

## சாக்கிய நாயனார்

கி.பி. 5ஆம் நூற்றாண்டு தொடங்கி கி.பி. 12ஆம் நூற்றாண்டு வரை வாழ்ந்த சிவனடியார்களின் வாழ்வியல் களஞ்சியமாக விளங்கும் பெரியபுராணத்தில் 63 நாயன்மார்களில் ஒருவராக சாக்கிய நாயனார் இடம்பெறுகின்றார்.

**"அறுசமயத் தலைவராய் நின்றவருக் கன்பராய்**
**மறுசமயக் சாக்கியர்தம் வடிவினால் வருந்தொண்டர்**
**உறுதிவரச் சிவலிங்கங் கண்டுவந்து கல்லெறிந்து**
**மறுவில்சரண் பெற்றதிற மறிந்தபடி வழுத்துவாம்"**[14]

என்ற பாடலில் அறுசமயத்திற்கும் தலைவராய் நிற்கும் சிவபெருமானுக்கு அன்பராய் விளங்கியவர் சாக்கியர் எனப் பதிவுச்செய்கிறார் சேக்கிழார். பெரியபுராணத்திற்கு அடிப்படையாக விளங்கிய திருத்தொண்டத் தொகை, திருத்தொண்டர் திருவந்தாதியிலும் சாக்கியர், சாக்கியன் என்ற பெயரீடுகள் வழிவழியாகத் தொடர்வதை,

**"வார்கொண்ட வனமுலையா ளுமைபங்கன் கழலே**
**மறவாது கல்லெறிந்த சாக்கியர்க்கு மடியேன்"**[15]
**"பகடன வாடையன் சாக்கியன் மாக்கட் டடவரையின்**
**மகடனந் தாக்கக் குழைந்ததிண் டோளர்வண் கம்பர்செம்பொன்**
**திகழ்த்திரு மேனியிற் செங்கல் லெறிந்து சிவபுரத்துப்**
**புகழ்தர புக்கவ னூர்சங்க மங்கை புவணியிலே"**[16]

மேற்கண்ட பாடல்களின் வழியே அறியமுடிகின்றது. மேலும் சாக்கிய நாயனார் வேளாளர் குலத்தில் பிறந்தவர் என்பதனை,

**"தாளாளர் திருச்சங்க மங்கையினிற் றகவுடைய**
**வேளாளர் குலத்துதித்தார் மிக்கபொரு டெரிந்துணர்ந்து**
**கோனாகிப் பல்லுயிர்க்கு மருளுடைய ராய்க்கெழுமி**
**நீளாது பிறந்திறக்கு நிலையொழிவே னெனநிற்பார்"**[17]

மேற்கண்ட பாடல் எடுத்துரைக்கின்றது. மேலும் சாக்கிய நாயனார் பிறந்தும் இறந்தும் வரும் நிலையின் தன்மை மேலும் நீண்டு செல்லாது இப்பிறப்பிலேயே அதனின்றும் நீங்குவேன் என்ற கருத்துடன் நிற்பவராக விளங்கிய சாக்கிய நாயனார் காஞ்சிபுரம் சென்று நல்ஞானத்தை அடைவதற்கு சாக்கியர் என்பார்கள் மொழியும் புத்த தருமங்களின் வழியை கற்றார்,

**"அந்நாளி லெயிற்காஞ்சி யணிநகரஞ் சென்றடைந்து**
**நன்ஞான மடைவதற்குப் பலவழியு நாடுவார்**
**முன்னாகச் சாக்கியர்தா மொழியறத்தின் வழிச்சார்ந்து**
**மன்னாத பிறப்பறுக்குந் தத்துவத்தின் வழியுணர்வார்"**[18]

என்பதனை இப்பாடலின் வாயிலாக அறியலாகிறது. சாக்கியர்களுடைய அரிய கலை நூலினைக் கற்று, அதன் துணிபாகப் பெறப்பட்ட முடிபும் இன்னும் ஏனைப் புறமாகிய சமயங்களிற் சார்வாகக் கூறும் முடிபுகளும் உண்மைப் பொருளல்ல என்ற உண்மையைத் தெளிந்தவராய் சிவபெருமானது திருவருள் கூடியதனாலே அழிவில்லாத சிவநன்னெறியே உண்மைப் பொருளாவது என்ற உணர்வினில் நின்றார் என்பதனை,

**"அந்நிலைமைச் சாக்கியர்தம் மருங்கலைநூ லோதியது**
**தன்னிலையும் புறச்சயமச் சார்வுகளும் பொருளல்ல**
**என்னுமது தெளிந்தீச ரருள்கூட வீறில்சிவ**

**நன்னெறியே பொருளாவ தெனவுணர்வு நாட்டுவார்”[19]**

இப்பாடல் உணர்த்துகின்றது. சேக்கிழாரின் கூற்றுப்படி சாக்கிய நாயனார் வேளாளர் குலத்தில் பிறந்தவர் என்பதும், அவர் சாக்கியராகிய புத்தத் துறவிகள் மொழியும் புத்த தருமங்களின் வழிச் சார்ந்தார் என்றும், அச்சாக்கியர்களுடைய அரிய கலை நூல்களைக் கற்றுத் தெளிந்துணர்ந்தவர் என்றும் பதிவு செய்கின்றார். சாக்கிய நாயனார் புராணத்தின் வழி புத்த தருமம் வழிநின்ற துறவிகளுக்கு சேக்கிழார் காலத்தில்கூட சாக்கியர் என்ற பெயரே வழக்கிலிருந்தது என்பது தெளிவாகிறது.

## சாக்கைக் கூத்து

சாக்கைக் கூத்து என்பது புராணக் கதைகளைக் கூறி நடித்து ஆடப்படும் ஒரு கூத்து வகையாகும். இக்கூத்தினை ஆடுபவர் சாக்கையர் எனப்படுவர். பண்டைத் தமிழகத்தில் ஆடப்பட்டு வந்த இக்கூத்து இன்றும் நடைபெற்று வருகிறது. கேரள மாநிலம் வட திருவாங்கூரில் உள்ள ஒவ்வொரு சிறப்புடைக் கோவிலிலும் நடைபெறும் விழா நாட்களில் சாக்கையார் கூத்து சிறப்பிடம் பெறுகிறது. கூத்து நடைபெறும்போது சொல்ல வந்த கதையுடன் பல்வேறு கிளைக்கதையை இடையில் கூறி கேட்பார் தமை மெய்மறக்கச் செய்யும் வகையில் இக்கூத்து நடைபெறும். கதை, நகைச்சுவை, நடிப்பு ஆகியவற்றில் சாக்கையர் திறமைமிக்கவராவர்.

## சாக்கையன் ஆடிய கூத்து

சேரன் அவையில் சாக்கையன் சிவபெருமான் ஆடிய ‘கொட்டிச்சேதம்’ என்னும் கூத்தை ஆடிக்காட்டினான். சிவபெருமான் உமாதேவியை இடப்பாகத்தில் தாங்கியபடி ஆடிய கூத்து ‘கொட்டிச் சேதம்’ ஆகும். சாக்கையன் இக்கூத்தினை ஆடியபோது அவன் காலில் அணிந்திருந்த சிலம்பு ஓசையிட்டது; கையில் இருந்த பறை ஆர்த்தது; அவனுடைய கண்கள் சிவனுடைய மனக்குறிப்பை உணர்த்தின. அவனுடை சிவந்த சடை கூத்தின் அசைவால் நாற்திசைகளிலும் அசைந்தாடியது. ஆனால் இடப்பாகம் இருந்த உமையின் ‘பாடகம்’ என்ற காலணி அசையவில்லை; சூடகம் துளங்கவில்லை; மேகலை ஒலிக்கவில்லை; மென்மார்பு அசையவில்லை; அவளது ‘குழை’ என்னும் காதணி ஆடவில்லை; நீண்ட கூந்தலும் அவிழவில்லை. திரிபுரம் எரித்தபின்னர் முக்கண்ணன் ஆடிய கொட்டிச் சேதம் என்னும் கூத்தினை சாக்கையன் ஆடிக்காட்டினான். இதனை,

**“திருநிலைச் சேவடி சிலம்புவாய் புலம்பவும்
பரிதரு செங்கையில் படுபறை ஆர்ப்பவுஞ்
செங்க ணாயிரத் திருக்குறிப்பு அருளவுஞ்
செஞ்சடை சென்று திசைமுகம் அலம்பவும்
பாடகம் பதையாது சூடகந் துளங்காது
மேகலை ஒலியாது மென்முலை அசையாது
வார்குழை ஆடாது மணிக்குழல் அவிழாது
உமையவள் ஒருதிற னாக, ஓங்கிய
இமையவ னாடிய கொட்டிச் சேதம்”[20]**

## பறையூர் சாக்கையன்

சிலம்பில் இக்கூத்தை ஆடியவன் பறையூரைச் சேர்ந்தவன் என்றும், அவ்வூர் நான்மறையோரைக் கொண்டதென்றும் சிலப்பதிகாரம் எடுத்துரைக்கின்றது.

**“பாத்தரு நால்வகை மறையோர்**

**பறையூர்க் கூத்தன் சாக்கையன்”[21]**

“செங்குட்டுவன் வஞ்சி மாநகர் வந்தவுடன் சொல்லியனுப்ப அன்றே சாக்கையன் வந்தாடினான். ஆதலால் பறையூர் வஞ்சி மூதூருக்கு அண்மையில் இருக்க வேண்டும்.”[22] “ஆரம்ப காலத்தில் சாக்கைக்கூத்து பற்றி ஆய்வு செய்த வரலாற்றுப் பேராசிரியர் டாக்டர் கிருஷ்ணசாமி ஐயங்கார், ‘இப்பறையூர் இக்காலப் ‘பரூர்’ என்பது. இவவூரில் நடிப்புத் தொழிலையுடைய பிராமண சமூகம் ஒன்று நிலைபெற்று வாழ்கின்றது என்று கூறியுள்ளார்.”[23]

## கேரளத்தில் சாக்கையர்

“சாக்கையர் என்னும் பெயருடன் கூத்தாடும் பிராமண வகுப்பினர் தமிழகத்தில் இன்று இல்லை. ஆனால், சேர நாடான கேரளத்தில் இன்றும் இருந்து வருகிறார்கள். கேரளத்தில் கோவிற்பணி செய்பவர்கள் ‘அம்பலவாசிகள்’ எனப்படுவர். நம்பியாசான், புஷ்பகன் (பூப்பள்ளி), சாக்கியர், பிராமணி அல்லது தெய்வம்படி, அடிகள், நம்பியார், பிஷாரடி, வாரியார், நாட்டுப்பாட்டன், தீயாடுன்னி, குருக்கள், பொதுவாள் என்னும் பிரிவினர் ‘அம்பலவாசிகள்’ என்னும் பொதுப்பெயரால் குறிப்பிடப்படுகின்றனர். அம்பலம் என்றால் கோவில். கோவிலில் வாழ்பவர் ஆதலால் அம்பலவாசிகள் எனப்பட்டனர். பிரதிலோமர், அநுலோமர் எனப்படும் இவ்விரு வகையாலும் வந்த மரபினரே அம்பலவாசிகள் என்றும், இவர்களுள் பல இனத்தவர் உள்ளனர் என்றும் கொச்சிநாட்டு மக்கள் தொகை அறிக்கை விளக்குகின்றது.”[24] “சாக்கையருள் சாக்கைய நம்பியாரும் ஓரினத்தவர். எனினும் சாக்கையர் மறையோருக்குரிய பூணூல் அணிவர். சாக்கைய நம்பியார் பூணூல் அணியார். சாக்கைய நம்பியார் பெண்களே நங்கையார் எனப்படுவர்.”[25]


பூணூல் அணிந்திருந்த நம்பூதிரிப் பெண்ணின் பிள்ளைகள் சாக்கையர் என்றும், அப்பொழுது பூணூல் அணியப்படாதிருந்த பிள்ளைகள் சாக்கைய நம்பியார் என்றும் பெயர் பெற்றனர். இவருள் சாக்கையர் மக்கள் தாய முறையைப் பின்பற்றுவர். சாக்கைய நம்பியார் மருமக்கள் தாய முறையைப் பின்பற்றுவர்.

“சாக்கையர் சேர நாட்டில் மட்டுமல்லாது சோழ நாட்டிலும் இருந்துள்ளனர். சோழப் பேரரசன் முதலாம் இராசேந்திரன் காலத்தில், காமரசவல்லி என்னுமிடத்துச் சிவன் கோயில் விழாவில் நடித்த சாக்கையன் ஒருவனது கூத்தைப் பாராட்டி, அரசன் அவனுக்குச் ‘சாக்கை மாராயன்’ என்ற பட்டம் தந்த செய்தியை அவ்வூர்க் கல்வெட்டு கூறுகிறது.”[26]

## பெரியகோளாப்பாடி

நடுகற்கள் நடப்படும் இடங்கள் பற்றி இலக்கியங்களில் கூறப்பட்டுள்ளன. இலக்கியங்களில் நடுகற்கள் இருப்பிடத்தைக் குறிப்பிடும்போது ஆற்றங்கரை, பெருவழி, சந்தி, பாலைநிலம், ஊர்புறம் ஆகியவற்றைச் சுட்டுகின்றன. நடுகற்கள் வைக்கப்பெறுகின்ற இடங்கள் காரண காரியத்துடனேயே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் வட்டத்திலுள்ள பெரியகோளாப்பாடி எனும் சிற்றூரின் தென்கோடியில்

அமைந்துள்ள ‘சாக்கைப் பறையனார்’ நடுகல் மேற்கு திசை நோக்கி காணப்படுகின்றது. திணை அடிப்படையில் இப்பகுதியான முல்லைத் திணைக்குரிய கூறுகளைப் பெற்றுள்ளது. தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள், புறப்பொருள் வெண்பாமாலை போன்ற நூல்களில் ஆநிரை மீட்ட வீரர்களுக்கே நடுகல் வைக்கப்படும் மரபினைப் போற்றுகின்றன. இவ்விலக்கியங்கள் நிரைமீட்ட வீரர்களைக் கரந்தையர் என்று குறிப்பிடும். அகநானூற்றில் 11 பாடல்கள் நடுகற்களைப் பற்றிப் பேசியுள்ளன. அந்த நடுகற்கள் எல்லாம் கரந்தை வீரர்களுக்கு எடுக்கப்பெற்றவை என்பது குறிப்பிடத்தக்கது. அந்தப் பாடல்களில் மழவர்களின் நிரை கவர்ந்தபோது அப்பூசலில் கொல்லப்பட்ட மறவர்களுக்கு நடுகல் எடுக்கப்பெற்ற செய்தி கூறப்பெறுகின்றது.



**பாடி**

முல்லைத் திணைக்குரிய காட்டில் போர் புரிவதற்குரிய தலைவன், தங்குவதற்குரிய பாசறை அமைந்திருக்கும் இடத்திற்குப் பாடி என்ற பெயர் வழங்கிற்று என்பதனை,

> **“கான்யாறு தழீஇய அகல்நெடும் புறவில்**
> **சேண்நாறு பிடவமொடு பைம்புதல் எருக்கி,**
> **வேட்டுப் புழை அருப்பம்மாட்டி, காட்ட**
> **இடுமுள் புரிசை ஏமுற வளைஇ,**
> **படுநீர்ப் புணரியின் பரந்த பாடி”**[27]

பகைப்புலம் சென்ற தலைவன் பாடிவீட்டில் இருந்தான். அது காட்டாறு பாயும் முல்லை நிலத்தில் இருந்தது. மணம் கமழும் பிடவம் பூச்செடிகள் அழிக்கப்பட்டு அந்தப் பாடிவீடு அமைக்கப்பட்டிருந்தது. வேட்டையாடும் விலங்குகள் அதில் நுழையா வண்ணம் முள்வேலிச் சுற்றுமதில் பாதுகாப்பிற்காக அமைக்கப்பட்டிருந்தது. காட்டாறு கடல்போல் அகன்றதாய் அதனைச் சுற்றிலும் ஓடும்படிச் செய்யப்பட்டிருந்தது என முல்லைப் பாட்டில் பகைப்புலம் சென்ற தலைவன் பாடி வீட்டில் தங்கியிருந்த காட்சியைப் பதிவு செய்கின்றது.

## கைக்கோளர்

கைக்கோளர் என்றால் வலிமையான (கோள்- வலிமை) கைகளை உடையவர் என்று பொருள். மேலும் பாலி மொழியில் கட்டிய - குல (Khattiya -kula) என்றால் அரசகுலம் என்று பொருள். அதுவே மருவி, கய்- குல (Khai -Kula) என்றாகி பின் கைக்கோளர் என்றானது என்றும் கூறுவர். இதனடிப்படையில் இக்கைக்கோளர்கள் முடியாட்சி காலங்களில் படைத்தளபதிகளாக, படைவீரர்களாகவும் மற்றும் நெசவு செய்யும் சமூகத்தினராகவும் விளங்கினர். இக்கைக்கோளர்களுக்கு செங்குந்தர் என்ற பட்டமும் உண்டு. செங்குந்தர் - செங்குந்தம் என்றால் இரத்தத்தால் (செம்மை) சிவந்த ஈட்டி (குந்தம்) என்று பொருள். எனவே செங்குந்தர் என்றால் அத்தகைய செந்நிறமான ஈட்டியை உடையவர் என்று பொருள். செங்குந்தர்கள் 'முதலியார்கள்' என்ற பட்டத்தையும் இணைத்துக் கொண்டனர். 'முதலி' என்பது படையில் முன்நிற்கின்ற அதிகாரியைக் குறித்தது.

“படைமுதலி என்னும் படைத்தலைமைக்குரிய பட்டமே இடைக்காலத்தில் முதலி என்று சுருங்கியது. வடுகச் சோழனான மூன்றாம் இராசேந்திரனின் காலத்தில், இம்முதலிகள் வெவ்வேறு சாதிகளைச் சேர்ந்தவர்களாக இருந்தனர். பிள்ளை முதலி, (தனியார் படைக்குத் தலைவனான) தளியாள் முதலி, (நாடு என்னும் கூறின் பாதுகாப்புக்குப் பொறுப்பான) நாட்டு முதலி, (மளையாளிகள் என்னும் தமிழ்ப் பழங்குடிகளில் இருந்து வந்த) மலையாள முதலி, (மலையரணைக் காத்து வந்த) மலையரண் முதலி, (பள்ளிநாட்டார் என்போரில் படைமுதலியாயிருந்த) பன்னாட்டு முதலி, (மறையர்களில் முதலியாயிருந்த) பறை முதலி என்று பல்வேறு முதலிகள் அப்போது இருந்தனர். கி.பி. 1258ஆம் ஆண்டு வெட்டிய செங்கம் சிவன் கோயில் கல்வெட்டு அதனைக் காட்டுகின்றது.

> **“ஆடையூர் நாட்டு எலியாற்றுக்கு மேற்கும் நம்....க்கு உள்ளுப்**
> **பட்ட நாடும் மயலயம் அடிவாரமும் தென்கரைநாடு மூவரை**
> **வென்ற நல்லூற்க்கு மேற்கு சிற்றிங்கைக்குக் கிழக்கு உட்பட்ட**
> **நாடும் மலையு முட்பட்ட நாடும் இந்த இரண்டுகரை நாட்**
> **டுக்கு உள்ளுப்பட்ட நாட்டவரும் நாட்டுநாயகஞ் செய்வார்**
> **களும் மன்றாடுவார்களும் பிள்ளை முதலிகளும் தனியாட்**
> **களும் படைநாயகஞ் செய்வார்களும் தனியாள் முதலிகளும்**
> **..ம்பனாய கரு....லிகளும் கூலிச்சேவகரும் கொந்தவிச் சாதிரரும்**
> **நவிரமலைத் தென்பற்று நாட்டவரும் நாட்டுமுதலிகளும் வட**
> **மலைநாட்டவரும் நாட்டுமுதலிகளும் முள்ளுப்பட்ட பலசனத்**
> **தோமும் அடிவாரத்து மலையாளரும் மலையாள முதலிகளும்**
> **முதுநிர் மலையாளரும் மலையரண்முதலிகளும் செட்டிகளும்**
> **வாணிகரும் கணக்கரும் கருமப்பெரும் பன்னாட்டவரும் பன்**
> **னாட்டு முதலிகளும் பொற்கொற்ற கைக்கோளரும் ஆண்டார்**
> **களும் சிவப்பிராம்மணரும் மன்றாடிகளும் முவச்சரும் தென்**
> **கரைநாட்டு வடதலை நாட்டவரும் தென்மலைநாட்டாரும்**
> **உட்பட்ட நாட்டவரும் தெல்ல... புலவரும் பண்ணுவாரும்**
> **நியாயத்தாரும் பன்னிரண்டு பணிமக்களுமுள்ளிட்ட பெரும்**
> **வேடரும் பாணரும் பறையரும் பறைமுதலிகளும் செக்கிலியாரும்**

> **இருளருமுள்ளிட்ட அனைத்துச் சாதிகளும் அந்தணன்தலை**
> **யாக அரிப்பன் கடையாக உள்ளுப்பட்ட அனைத்து சாதிமாற்கு**
> **தெ..ல்லாரும் ….ணம் பண்ணின படியாவது…”**

என்னும் அக்கல்வெட்டின் வாயிலாகத் தொண்டை நாட்டில் மூல மறையரான பறையரும்கூட முதலிகளாயிருந்த உண்மை விளங்கும். பறையர்களில் உழுபறையென், நெசவுப் பறையன் என்னும் இருபெரும் பிரிவுகள் இருந்தன. மறையர்களில் சிலருக்கு இருந்த பறைமுதலி என்னும் பட்டத்தைத் தழுவியே மறையர்களில் ஒரு பிரிவினரான கைகோளர்களும் செங்குந்தர்களும் பிற்காலத்தில் தங்களை முதலியார்கள் என்று கூறிக் கொள்ளத் தொடங்கினர்”[28] என்பாரின் கூற்றிலிருந்து மறையராகிய பறையர்களில் ஒரு பிரிவின் நெசவுப் பறையர்களே பிற்காலத்தில் ‘முதலி’ என்றப் பட்டத்தைத் தழுவியே செங்குந்தர்களும் கைக்கோளர்களும் தங்களை முதலியார்கள் என்று அழைத்துக் கொண்ட உண்மை வெளிப்படுவதை காணலாகிறது. இன்று உள்ள பறையர் பிரிவினரில் கோலிய பறையன் என்பவர்களே முற்காலத்தில் நெசவுப் பறையர்களாக விளங்கியவர்களாவர். எனவே இக்கோளப்பாடி எனும் ஊருக்கு கைக்கோளர்பாடி என்னும் பெயரே மூல வழக்காக இருந்திருக்க வேண்டும் என்பதும் இக்கைக்கோளர்பாடியே இன்று சிறிய பெரிய என்னும் பிரிவாகப் பிரிக்கப்பட்டு சின்னக்கோளப்பாடி, பெரியகோளப்பாடி என்று வழங்கி வருகின்றது. கோலியப் பறையர்கள் கரும காரியங்களில் ஈடுபடும் அதிகாரிகளாக இருந்துள்ளனர் என்பதையும் அறியமுடிகின்றது.

இக்கோளாப்பாடி என்ற ஊரில் அமைந்துள்ள நடுகல்லின் வாசகம் சொல்லும் பொருளாவது,

மகேந்திரவர்மனின் பதினொன்றாவது ஆட்சியாண்டாகிய கி.பி.601ஆம் ஆண்டில் கீழ்வேணாடாகிய தருமபுரி, செங்கம் பகுதியை எல்லையாக உடைய மகேந்திரனின் ஆட்சிப்பகுதிக்குட்பட்ட கோளாப்பாடி எனும் ஊரில் பெரும்பாண்ணரையரின் மருமக்களோடு அனந்தாபூரிலிருந்து திருவலம் பகுதியைத் தலைமையிடமாகக் கொண்டு ஆண்டவர்கள்) மகேந்திரவர்மனின் கோட்டையில் அதிகாரியாக சேவகம் புரிந்து வந்த சாக்கைப் பறையனாரும் அவருடைய இளைய மகன் ஏறனோடு நடைபெற்ற போரில் சாக்கைப் பறையனாரும், அவனுடைய இளமகனாகிய ஏறனும் கொல்லப்பட்டதற்காக எடுக்கப்பெற்றதே இந்நடுகல்லாகும். வெட்சி வீரர்களாக கவர்தலுக்கு வந்த பெரும்பாண்ணரையரின் மருமக்களோடு கரந்தை வீரர்களாக மீட்டலை எதிர்கொண்ட சாக்கைப் பறையனாரும் அவருடைய இளமகன் ஏறனும் எதிர்த்துப் போரிட்டு வீழ்ந்தனர் என்ற நிகழ்வையே இந்நடுகல் நமக்கு எடுத்துக்காட்டுகின்றது.

## முடிவுரை

இந்நடுகல் கல்வெட்டின் வாயிலாக நமக்கு சில உண்மைகள் கிடைக்கின்றன. சங்ககால திணைக்குடி வாழ்வியலின் தொடர்ச்சி கி.பி. 601 இல் தொடர்வதை அறியமுடிகின்றது. ஏனெனில் சங்க இலக்கியங்களில் கரந்தை வீரர்களுக்கே நடுகல் எடுக்கும் வழக்கம் சிறப்பிற்குரியதாக இருந்தது. அதேபோல் இக்கல்வெட்டில் வருகின்ற ‘சாக்கைப் பறையனார்’ என்ற சொல் இன்றும் ஆய்விற்குரியதாக விளங்குகின்றது. பறையனார் என்பதை வறையனார் என்று படிக்கும் வழக்கமும் தொல்லியல், கல்வெட்டியல் ஆய்வாளர்களிடம் உண்டு. ஆனால் இவ்வாய்வில் பறையனார் என்ற சொல்லின் முன்னொட்டாக பொறிக்கப்பட்டுள்ள ‘சாக்கை’ என்ற சொல்லும் அச்சொல் சங்க இலக்கியங்கள் தொடங்கி பக்தி இலக்கியங்கள் காலம் தொட்டு இக்காலப் பதிவுகள் வரை பறையர்களோடு தொடர்புபடுத்தியே வந்துள்ளதை உரிய ஆவணங்களோடு மெய்ப்பிக்கப்பட்டுள்ளன.’

- துடியன், பாணன், பறையன், கடம்பன் ஆகிய முல்லைத்திணைக்குரிய குடிகள் தொல்குடிப் போர்களின் உறுப்புகளாக விளங்கியதோடு அரசர்களின் முதன்மையான காரியங்களை செய்யும் அதிகாரிகளாக விளங்கியுள்ளனர் என்பதை அறியமுடிகின்றது.
- 'சாக்கைப் பறையனார்' என்ற தொடரிலுள்ள பறையர் குடியின் முன்னொட்டாக 'சாக்கை' என்ற சொல் பறையர்களோடும், பறையர்களின் உட்பிரிவுகளோடும் தொடர்வதை எடுத்துரைக்கப்பட்டுள்ளது. குறிப்பாக தமிழகம் தொடங்கி கேரளம் வரையுள்ள இன்றை பகுதிகளில் கூட சாக்கையன், சாக்கியர் என்ற சொல்லாடல்கள் பறையர்களின் கூட்டத்தோடும், பறையர்களின் சாதிக்குரியதாகவும் விளங்குவதையும் ஆராயப்பட்டுள்ளது.
- சாக்கையார் பூணூல் அணியும் வழக்கத்தையுடையவர் என்றும், 'பறையூர்க் கூத்தன் சாக்கையன்' என்று சிலப்பதிகாரத்தில் சிறப்பிக்கப்படும் இச்சாக்கையன் வாழ்ந்த 'பறையூர்' இன்றைக்கு கேரளத்தில் 'பரூர்' என்னும் பகுதியாக மருவியுள்ளதோடு அப்பகுதியில் நடிப்புத் தொழிலையுடைய பிராமணச் சமூகம் ஒன்றும் நிலைபெற்றிருப்பதையும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.
- முதலாம் இராசேந்திரன் காலத்தில் சாக்கையன் கூத்தினைப் பாராட்டி 'சாக்கை மராயன்' என்ற பட்டம் அளிக்கப்பட்டுள்ளது.
- தொண்டை நாட்டில் மூலமறையரான பறையருக்கு 'முதலி' என்ற பட்டம் இருந்ததையும், இம்முதலிப் பட்டம் பல்வேறு சாதியினருக்கும் வழங்கி வந்ததையும் செங்கம் சிவன் கோயில் கல்வெட்டு வாயிலாக அறிந்து கொள்வதோடு கைக்கோளர்களும் செங்குந்தர்களும் இம்முதலிப் பட்டத்தை பிற்காலத்தில் கூறிக் கொண்டதையும் விளக்கப்பட்டுள்ளது
- கௌதம புத்தர் தோன்றிய குலம் சாக்கியகுலம் என்பதையும், பெரியபுராணத்தில் வேளாளர் குலத்தில் தோன்றியவராக சாக்கிய நாயனார் குறிக்கப்பெற்றுள்ளதோடு சாக்கியர் என்ற பெயரோடு புத்தம் சமயம் சென்று மீளுபவராகவும் காட்சிப்படுத்துவதையும் ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளது. பறையர்கள் வேளாளர் குடியாகவும் அதாவது உழவுப் பறையராகவும் விளங்கியதையும் இச்சாக்கிய நாயனாரோடு பொருத்திப் பார்க்க வேண்டியத் தேவை இருக்கின்றது.
- சாக்கை, சாக்கையன் என்ற சொற்கள் நிமித்திகன், புரோகிதனாக பண்டைக் காலத்தில் விளங்கிய பறையர்களின் உட்பிரிவாக உள்ள வள்ளுவர்களாகிய மறையோர்களுடன் தொடர்புடையதை விளக்கியுரைக்கப்பட்டுள்ளது. மேலும் சாக்கையன் பறையரில் கூத்தாடும் பிரிவினைச் சேர்ந்தவர்கள் என்பதையும் ஆய்விற்குட்படுத்தப்பட்டுள்ளது.
- 'சாக்கைப் பறையனார்' என்ற நடுகல் வாசகம் அமைந்துள்ள பெரியகோளாப்பாடி என்னும் ஊர்ப்பெயர் கைக்கோளர்களாகிய நெசவுப் பறையர்களோடு தொடர்புடையதாக இருப்பதையும் விளக்கியுரைக்கப்பட்டுள்ளது.
- முல்லைத் திணைக்குரிய வாழ்வியல் பகுதியோடு தொடர்புடையதாக இவ்வூர் அமைந்திருப்பதையும், இப்பகுதி மகேந்திரவர்ம பல்லவருடைய ஆட்சிக்குட்பட்ட எல்லையாக விளங்கியிருந்தமையும், கீழ்வேணாடு என்ற பெயர் இப்பகுதிக்கு வழங்கியிருந்தமையும், பெரும்பாண்ணரையரோடு சாக்கைப் பறையனாரும் அவருடைய இளமகனாகிய ஏறன் போர் புரிந்து இறந்துபட்டமையால் கரந்தை வீரர்களுக்குரியதாகப் போற்றப்படும் நடுகல் எடுப்பிக்கப்பெற்ற செய்தியும் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.
- சாக்கியர் அடையாளம் என்பது சங்ககாலம் தொடங்கி பதினேழாம் நூற்றாண்டு வரை இலக்கிய, கல்வெட்டு ஆவணங்களில் இருக்கின்றன. தமிழகத்தில் பறையர்களில் ஒரு பிரிவினரான சாக்கியர்களுக்கு

முற்காலத்தில் சாதிச்சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. தமிழகத்தின் தென்மாவட்டமான காரைக்குடி சாக்கோட்டை என்ற சாக்கியக் கோட்டைப் பகுதியில் பூர்வீகக் குடியான சாக்கையர் தற்பொழுது பறையர்கள் என்ற பெயரில் சாதிச்சான்றிதழ் வாங்குகின்றனர்.

## அடிக்குறிப்புகள்


1. புறநானூறு.பா.எண்.335
2. மேலது.
3. நடுகல் கல்வெட்டுகள்-அர.பூங்குன்றன்.பக்-7
4. மேலது.பக்-9
5. நடுகல் கல்வெட்டுகள்-அர.பூங்குன்றன்.பக்-205
6. வள்ளுவத்தின் வீழ்ச்சி-குணா.பக்-252
7. மேலது.பக்-258
8. அயோத்திதாசர் சிந்தனைகள்-1 (அரசியல்,சமூகம்) பக்-127
9. மேலது.பக்-599
10. மேலது. (சமயம்,இலக்கியம்).பக்-125
11. சமஸ்கிருதமாக்கப்பட்ட சாக்கையர் கூத்து,ஒப்புரவு. செப்-அக்-2001. பக்-27
12. அயோத்திதாசர் சிந்தனைகள்-2.(சமயம்,இலக்கியம்) பக்-194-195
13. வள்ளுவப் பார்ப்பாரியம்-குணா.பக்-98-99
14. பெரியபுராணம்.பா.எண்-3636
15. திருத்தொண்டத் தொகை.பா.எண்-6
16. திருத்தொண்ட திருவந்தாதி.பா.எண்-41
17. பெரியபுராணம்.பா.எண்-3637
18. மேலது.பா.எண்-3638
19. மேலது.பா.எண்.3639
20. சிலப்பதிகாரம்.நடுகல்காதை.வரி.67-75
21. மேலது.வரி.76-77
22. A Social History of India, S.N.Sadasivam.page.no.325
23. சேரன் வஞ்சி- டாக்டர் கிருஷ்ணசாமி ஐயங்கார்.பக்.62
24. Cochin Census Report 1901: Castes and Tribes of SA.1.Vol-I Page.No.30
25. Malabar Gazetter, Castes and Tribes of SA.1.Vol.II Page.No.10
26. A.R.E -1924-25, Page.No.82
27. முல்லைப்பாட்டு.அடி-24-28
28. வள்ளுவப் பார்ப்பாரியம்-குணா.பக்-255